1 3 OCT 20
Eastern University, S

# EASTERN UNIVERSITY, SRI LANKA

## FACULTY OF COMMERCE AND MANAGEMENT

## PART I EXAMINATION IN BUSINESS ADMINISTRATION / COMMERCE 1998/99

## (March 2005) (EXTERNAL)

## BBA / COM 202 - ADVANCED FINANCIAL ACCOUNTING – I

சகல வினாக்களுக்கும் விடை தருக. நேரம் : 03 மணித்தியாலங்கள்

கணித்தற்பொறி அனுமதிக்கப்பட்டுள்ளது.

---

1. டெல் கம்பனியின் 30.06.2004 இல் உள்ளவாறான ஐந்தொகை பின்வருமாறு :

| | ரூபா | ரூபா | ரூபா |
|---|---|---|---|
| நடைமுறையல்லா சொத்துக்கள் | | | |
| காணி கட்டடம் | | | 300000 |
| பொறி இயந்திரம் | | | 400000 |
| மோட்டார் வாகனம் | | | 200000 |
| | | | 900000 |
| நடைமுறைச் சொத்துக்கள் | | | |
| இருப்புக்கள் | | 100000 | |
| கடன்பட்டோர் | | 135000 | |
| காசும் வங்கியும் | | 165000 | 400000 |
| | | | 1300000 |
| பங்கு மூலதனம் | | | |
| ஒவ்வொன்றும் ரூ.10 வான 70000 சாதாரண பங்குகள் | | | 700000 |
| ஒதுக்கங்கள் | | | |
| பொது ஒதுக்கம் | | 200000 | |
| இலாப நட்டக் கணக்கு | | 50000 | 250000 |
| நீண்ட காலப் பொறுப்புக்கள் | | | |
| 10% தொகுதிக் கடன்கள் | | | 200000 |
| நடைமுறைப் பொறுப்புக்கள் | | | |
| கடன் கொடுத்தோர் | | 80000 | |
| பங்கிலாபம் சென்மதி | | 25000 | |
| வரி சென்மதி | | 45000 | 150000 |
| | | | 1300000 |

மேலதிக தக்வல்கள் :

1. டெல் கம்பனியானது பெல் கம்பனியால் 01.07.2004 இல் பின்வரும் நிபந்தனைகளின் கீழ் ஈர்ப்பு செய்யப்பட்டது.

   i. காசு மற்றும் வங்கி மீதியைத் தவிர டெல் கம்பனியின் அனைத்து சொத்துக்களும் பெல் கம்பனியால் கையேற்கப்படுவதுடன் வரி சென்மதியைத் தவிர ஏனைய அனைத்து நடைமுறைப் பொறுப்புக்களும் அக் கம்பனியால் கையேற்கப்படும்.

   ii. டெல் கம்பனியின் 10% தொகுதிக்கடன்கள் 10% கழிவுடன் பெல் கம்பனியின் 9% தொகுதிக்கடன்களை வழங்குவதன் மூலம் தீர்க்கப்படுதல்.

   iii. டெல் கம்பனியின் சாதாரண பங்குதாரருக்கு அவர்கள் வைத்திருந்த ஒவ்வொரு சாதாரண பங்கிற்கும் ஒவ்வொன்றும் ரூ. 10 வான பெல் கம்பனியின். சாதாரண பங்குகளை பங்கொன்று ரூ. 12 சந்தை விலையில் வழங்குவதுடன் ரூ. 3 காசினையும் வழங்குதல்.

2. டெல் கம்பனியின் சொத்துக்கள் பின்வரும் பெறுமதிகளில் பெல் கம்பனியால் கொள்வனவு செய்யப்பட்டன.

| | ரூபா |
|---|---|
| காணி, கட்டடம் | 450000 |
| பொறி, இயந்திரம் | 375000 |
| மோட்டார் வாகனங்கள் | 175000 |
| இருப்புக்கள் | 90000 |
| கடனபட்டோர் | 130000 |

3. கடன்கொடுத்தோர் மற்றும் பங்கிலாபம் சென்மதி என்பன புத்தகப் பெறுமதியில் பெல் கம்பனியால் கையேற்கப்பட்டன.

4. வரி சென்மதி ரூ. 40000 ஆக உடன்படப்பட்டு டெல் கம்பனியால் செலுத்தப்பட்டது.

5. கலைப்புச் செலவு ரூ. 10000 டெல் கம்பனியால் செலுத்தப்பட்டது.

வேண்டப்படுவது :

i. டெல் கம்பனியின் கணக்கேடுகளை மூடுவதற்கான அவசியமான பேரேட்டுக் கணக்குகளைத் தயாரிக்குக.

ii. பெல் கம்பனியின் ஏட்டில் டெல் கம்பனியின் ஈர்ப்பு தொடர்பான கொடுக்கல் வாங்கல்களை பதிவதற்கான நாட்குறிப்புப் பதிவுகளை எழுதுக.

(25 புள்ளிகள்)

**02.** றோயல் கம்பனியானது கொழும்பில் தலைமை அலுவலகத்தையும் லண்டனில் வெளிநாட்டுக்கிளை ஒன்றையும் கொண்டு இயங்குகின்றது. தலைமை அலுவலகத்தினதும் கிளையினதும் 30.06.2004 இல் தயாரிக்கப்பட்ட பரீட்சை மீதிகள் பின்வருமாறு :

| விடயங்கள் | தலைமையலுவலகம் வரவு (ரூபா) | தலைமையலுவலகம் செலவு (ரூபா) | லண்டன் கிளை வரவு (£) | லண்டன் கிளை செலவு (£) |
|---|---|---|---|---|
| பங்கு மூலதனம் | | 200000 | | |
| காணி, கட்டடம் | 40000 | | | |
| நன்மதிப்பு | 20000 | | | |
| பொறி இயந்திரம் | 320000 | | 1800 | |
| தளபாடம் பொருத்திகள் | 12000 | | 120 | |
| 1.7.2003ல் இருப்புக்கள் | 136000 | | 840 | |
| கொள்வனவுகள் | 621600 | | 3600 | |
| கிளைக்கு அனுப்பிய பொருட்கள் | | 157600 | 1200 | |
| விற்பனை விநியோகச் செலவுகள் | 16800 | | 30 | |
| நிர்வாகச் செலவுகள் | 31600 | | 150 | |
| நிதிச் செலவுகள் | 4800 | | 15 | |
| நடைமுறைக் கணக்குகள் | 172000 | | | 1710 |
| கடன்பட்டோர் | 88000 | | 360 | |
| கடன்கொடுத்தோர் | | 288400 | | 255 |
| காசு மீதி | 40800 | | 15 | |
| வங்கி மீதி | 44000 | | 75 | |
| விற்பனைகள் | | 901600 | | 6240 |
| | 1547600 | 1547600 | 8205 | 8205 |

மேலதிகத் தகவல்கள் :

1. 30.06.2004ல் உள்ளவாறான இருப்புக்கள் : தலைமையலுவலகம் - ரூ. 116800
   கிளை - £ 780
2. லண்டன் கிளையின் நிலையான சொத்துகள் 01.07.1999இல் கொள்வனவு செய்யப் பட்டவையாகும். இரு நிறுவனங்களினதும் நிலையான சொத்துக்களுக்கு அவற்றின் புத்தகப் பெறுமதியில் ஆண்டுக்கு 10% பெறுமானத்தேய்வுக்கு ஏற்பாடு செய்யப்படல் வேண்டும்.
3. நாணய மாற்று விகிதங்கள் வருமாறு :

01.07.1999 இல் - £ 1 = ரூ. 120

01.07.2003இல் - £ 1 = ரூ. 170

30.06.2004 இல் - £ 1 = ரூ. 190

2003/ 04 இற்கான சராசரி - £ 1 = ரூ. 180

வேண்டப்படுவது :

1. லண்டன் கிளையின் பரீட்சை மீதியை இலங்கை ரூபாவின் பெறுமதிக்கு மாற்றுக.
2. தலைமையலுவலகம், கிளை மற்றும் இணைந்த வியாபாரம் ஆகியவற்றின் 30.06.2004 இல் முடிவுற்ற ஆண்டுக்கான இறுதிக் கணக்குகளை நிரன்முறையில் தயாரிக்குக.

(25 புள்ளிகள்)

**03.** A கம்பனியானது B கம்பனியின் ஒவ்வொன்றும் ரூ. 10வான 40000 சாதாரண பங்குகளை 01.07.2003 இல் கொள்வனவு செய்தது. 30.06.2004இல் உள்ளவாறான அக் கம்பனிகளின் ஐந்தொகைகள் பின்வருமாறு :

| பொறுப்புக்கள் | A | B | சொத்துக்கள் | A | B |
|---|---|---|---|---|---|
| பங்கு மூலதனம் (ரூ. 10) | 1000000 | 500000 | காணி, கட்டடம் | 200000 | 350 |
| பொது ஒதுக்கம் 1.7.2003 | 100000 | 10000 | மோட்டார் வாகனம் | 300000 | 200 |
| இலாபநட்ட க/கு 1.7.2003 | 50000 | 30000 | Bன் பங்குகளில் முதலீடு | 500000 | |
| ஆண்டு இலாபம் | 60000 | 40000 | இருப்புக்கள் | 75000 | 50 |
| கடன் கொடுத்தோர் | 70000 | 90000 | கடன்பட்டோர் | 50000 | 80 |
| சென்மதி உண்டியல் | 10000 | 75000 | வருமதி உண்டியல் | 50000 | 5 |
| | | | காசும் வங்கியும் | 115000 | 60 |
| | 1290000 | 745000 | | 1290000 | 745 |

மேலதிக தகவல்கள் :

i. A கம்பனியின் வருமதி உண்டியல்கள் B கம்பனியால் ஒப்புக் கொள்ளப்பட்ட ரூபா. 3000 உண்டியலையும் உள்ளடக்கியுள்ளது.

ii. A கம்பனியின் கடன்பட்டோர் B கம்பனியிடமிருந்து பெறவேண்டிய ரூபா 10000யும் உள்ளடக்கியுள்ளது.

iii. A கம்பனியின் இருப்புக்கள் B கம்பனியிடமிருந்து கொள்விலையுடன் 25% கூட்டிய விலையில் கொள்வனவு செய்யப்பட்ட ரூ. 30000 பொருட்களையும் உள்ளடக்கி உள்ளது.

iv. கொள்வனவுத் திகதியில் B கம்பனியின் காணி கட்டடங்களும், மோட்டார் வாகனங்களும் முறையே ரூ. 396000 ஆகவும் ரூ. 225000 ஆகவும் விலை மதிக்கப் பட்டன. காணி கட்டடங்கள் 01.07.1989 இல் கொள்வனவு செய்யப்பட்டவை ஆகும். அவை ஆண்டுக்கு 2% நேர்கோட்டு முறையில் பெறுமானத்தேய்வு இடப்படுகின்றன. மோட்டார் வாகனங்கள் 01.07.1998 இல் கொள்வனவு செய்யப் பட்டன. அவற்றின் பயன்தரு பொருளாதார ஆயுட்காலம் கொள்வனவு ஆண்டிலிருந்து 10 ஆண்டுகளாகும்.

1 3 OCT 2005
Eastern University, Sri Lanka

v. B கம்பனியின் கொள்வனவில் ஏதேனும் நேர் நன்மதிப்பு எழின் அது திரட்டிய இலாபத்திற்கெதிராக 05 ஆண்டுகளில் பதிவழிப்புச் செய்யப்படல் வேண்டும்.

வேண்டப்படுவது :

30.06.2004 இல் உள்ளவாறான திரட்டிய ஐந்தொகையைத் தயாரிக்குக.

(25 புள்ளிகள்)

**04. I.** 01.07.2001 இல் சூரியா ரவல்ஸ் கம்பனியானது இந்தியன் மோட்டார்ஸ் கம்பனியிடமிருந்து வாடகைக் கொள்வனவு அடிப்படையில் மோட்டார் வான் ஒன்றைக் கொள்வனவு செய்தது. வாடகைக் கொள்வனவு உடன்படிக்கையின் படி ரூ. 300000 உடன் காசும் ஒவ்வொன்றும் ரூ. 200000 வான மூன்று வருடாந்த சம தவணைக் கட்டணங்கள் 30.06.2002 இலிருந்து தொடங்கும் ஒவ்வொரு நிதியாண்டு முடிவிலும் செலுத்தப்பட வேண்டியிருந்தது. நிலுவைகளில் ஆண்டுக்கு 8% வட்டி அறவிடப்பட்டது. அவ் வட்டியானது வருடாந்த தவணைக் கட்டணங்களில் உள்ளடங்கியுள்ளது. மோட்டார் வான் மீது ஆண்டுக்கு 20% நேர்கோட்டு முறையில் பெறுமானத் தேய்வுக்கு ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.

வேண்டப்படுவது :

1. மோட்டார் வானின் காசு விலையைக் கணிக்க.
2. மோட்டார் வானின் வாடகைக் கொள்வனவு விலையைக் கணிக்க.
3. வாடகைக் கொள்வனவு மொத்த வட்டியையும் வருடாந்த வட்டிகளையும் கணிக்க.
4. சூரியா ரவல்ஸ் கம்பனியின் ஏட்டில் வாடகை விற்பனையாளர் கணக்கில் வாடகைக் கொள்வனவு விலையைப் பதியும் முறையில் 30.06.2002, 2003, மற்றும் 2004 இல் முடிவுற்ற ஆண்டுக்கான பின்வரும் கணக்குகளைத் தயாரிக்குக.
   i. மோட்டார் வான் கணக்கு
   ii. இந்தியன் மோட்டார்ஸ் கம்பனி கணக்கு
   iii. வாடகைக் கொள்வனவு வட்டிக் கணக்கு
5. 30.06.2002 இல் உள்ளவாறான சூரியா ரவல்ஸ் ஐந்தொகையில் பொருத்தமான விடயங்களைக் காட்டுக.

(15 புள்ளிகள்)

**II.** பிறவுண்ஸ் கம்பனியானது வாடகைக் கொள்வனவு முறையில் இலத்திரனியல் பொருட்களை விற்பனை செய்கின்றது. 30.07.2004 இல் முடிவுற்ற ஆண்டுக்கான வாடகைக் கொள்வனவு கொடுக்கல் வாங்கல்களின் சுருக்கம் பின்வருமாறு :

| | ரூபா |
|---|---|
| வாடகைக் கொள்வனவில் விற்கப்பட்ட பொருட்கள் - கிரயத்தில் | 540000 |
| - வாடகை கொள். விற்பனை விலையில் | 900000 |
| பெறப்பட்ட வைப்புக்கள் | 225000 |
| பெறப்பட்ட தவணைக் கட்டணங்கள் | 360000 |

வாடகைக் கொள்வனவு உடன்படிக்கையின்படி பொருட்களின் வாடகைக் கொள்வனவு விலையில் ¼ உடன் வைப்பாகவும் மிகுதி 12 மாத சம தவணைக் கட்டணங்களாகவும் செலுத்தப்பட வேண்டியிருந்தது. ரூ. 20000 கிரயமுடையதும் ரூ. 32000க்கு விற்பனை செய்யப்பட்டதுமான பொருட்கள் ரூ. 8000 வைப்பினையும் ரூ. 4000 தவணைக் கட்டணங்களையும் பெற்றதன் பின்னர் மீளுடமையாக்கப்பட்டன. அப் பொருட்கள் ரூ. 1000 செலவில் திருத்தியமைக்கப்பட்ட பின்னர் ரூ. 12000 ஆக மதிப்பீடு செய்யப் பட்டன.

வேண்டப்படுவது :

"வாடகையில் இருப்பு" முறையில் பிறவுண்ஸ் கம்பனியின் ஏட்டில் பொருத்தமான பேரேட்டுக் கணக்குகளைத் தயாரிக்குக.

(10 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)